# <u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

**<u>அ.வ எண்: 68/2013 சிவாஜி ராஜன் (பிசா1) தேதி:10.08.2024</u>**

**<u>பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

OS No 67/2013 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில் எனது பெற்றோர்கள் இறப்பிற்கு பின் குடும்பச்சொத்துக்களை பாகம் செய்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. இந்த வழக்கில் தான் அந்த விவரங்களை குறிப்பிட்டுள்ளேன். இந்நீதிமன்ற OS No 67/2013 வழக்கில் பத்திரகாளியம்மன் கோவில் அருகில் உள்ள வீடுகள், மற்றும் செவந்திப்பட்டியில் உள்ள வீடுகள் நிலங்கள் ஆகியவை காட்டப்பட்டுள்ளன என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்மீது இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்ட்ட OS No 67/2013 வழக்கின் பிராது நகல் என்றால் சரிதான். அந்த ஆவணம் **வாசாஆ.17.** என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி OS No 67/2013 வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அந்த ஆவணம். **வாசாஆ.18.** கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அவ எண். 296/2013 வழக்கில் நான் குடியிருந்து வரும் கோவில்பட்டி, போஸ்ட் தெருவில் உள்ள வீடுதான் முக்கியப்பிரச்சனையாக உள்ளது என்றால் சரிதான். 18.06.2003 தேதிய உயில் ஆவணத்தில் அந்த வீடு துலங்குகிறது என்றால் சரிதான். அந்த வீட்டை பொறுத்து எனக்கும் என் சகோதரிக்கும் கடந்த 18 வருடங்களாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது சகோதரி உயில் ஆவணத்தின் அடிப்படையில் சொத்துக்களை பிரித்து தர வழக்கு தாக்கல் செய்ய கோவில்பட்டி வட்டசட்டப்பணிகள் குழுவில் வறியவர் மனு கொடுத்தார். அதில் நான் என் ஆட்சேபணையை ஆவணங்களுடன் தாக்கல் செய்ததில் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது சகோதரி கோவில்பட்டி வட்டசட்டப்பணிகள் குழுவில் கொடுத்த மனு என்றால் சரிதான். அந்த ஆவணம் **வாசாஆ.18**. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த மனுவில் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் statement என்றால் சரிதான். அந்த ஆவணம். **வாசாஆ.19.** நான் கோவில்பட்டி வட்டசட்டப்பணிகள் குழுவில் கொடுத்த பதில் மனுவிலும், இந்நீதிமன்ற அவ எண். 67/2013 வழக்கிலும்

18.06.2003 தேதிய உயில் ஆவணம் பற்றி நான் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் எனக்கு நியாபகம் இல்லை. 18.06.2003 தேதிய உயில் ஆவணம் பின்யோசனையுடன் எங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த உயில் ஆவணத்தில் கையொப்பமும் மோசடி மற்றும் forgery ஆனது என்றால் சரியல்ல. மேற்படி உயில் ஆவணம் பதிவுச்செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். பிசாஆ.6 உயில் ஆவணத்தில் கண்ட முத்திரைத்தாள்கள் 2005 ம் வருடம் செப்டம்பர் மாததிற்கு உரிய முத்திரை வைக்கப்பட்டுள்ளது என்றால் அந்த முத்திரை தெளிவாக இல்லை. அந்த முத்திரைத்தாள் 2005 ம் வருடம் வாங்கப்பட்டு முன்தேதியிடப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் வாங்கப்பட்ட Notary கையொப்பம் உண்மையை மறைத்து சம்பந்தபட்ட நபர் இல்லாமல் பெறப்பட்ட கையெழுத்து என்றால் சரியல்ல. அந்த உயில் ஆவணத்தில் Notary public வழக்கறிஞரின் முத்திரை வில்லை ஒட்டப்படவில்லை என்றால் அன்றைய தினம் முத்திரை வில்லை கிடைக்கவில்லை என Notary public வழக்கறிஞர் தெரிவித்தார். அந்த Notary public வழக்கறிஞரின் பதிவேடு உரிய வரிசை எண் , தேதி அந்த உயில் ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பிசாஆ.6 முழுக்க மோசடியான ஆவணம் என்றாலும், நீதிமன்றத்தில் தவறான தகவலை தெரிவித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள 01.06.2000 தேதிய உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அது சட்டப்படி செல்லத்தக்கது என்றாலும் சரியல்ல. அந்த உயில் அடிப்படையில் வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு எவ்வித உரிமையும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை:**</u> இல்லை

(ஒம்) D.மாரிக்காளை.,B.Sc.,M.L.,

சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.